**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No.72 of 2024**

அரசுதரப்பு **1 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுதாகர் | வயது | : | 41 |
| தந்தை பெயர் | : | சுப்ரமணி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | வண்டிபாளையம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 7094649669 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.04.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரி முன்னிலை, வழக்கறிஞர் முன்னிலை)**

முதல் விசாரணை**:**

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். விபத்தில் இறந்த கோகுல் எனது மகன். அவருக்கு 15 வயது இருக்கும். 06.09.2023 அன்று பூ வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் காலை 10.15 மணியளவில் திருப்பாபுலியூர் மார்க்கெட்டிற்கு சென்றார். வண்டிபாளையம் ரோட்டில் பார்வதி ஆயில் மில் அருகே சென்றபோது அவருக்கு பின்னால் வந்த ஸ்கூட்டி மோதி கீழே விழுந்ததில் எனது மகனின் பின் தலையில் அடிபட்டுவிட்டது என்று எனக்கு உன் ஊரை சேர்ந்த கன்னியப்பன், ஏழுமலை ஆகியோர் போன் மூலம் தகவல் சொன்னார்கள். உடனே நான் தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து என் மகனை ஆட்டோவில் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு முடியாது என்று கூறியதால் ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு இரவு 11.30 மணியளவில் என் மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக திருப்பாபுலியூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்பட்டது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் கொடுத்த புகாரில் ஸ்கூட்டி மோதி விழுந்ததாக கூறியுள்ளேன். போலிஸ் விசாரணையிலும் ஸ்கூட்டி மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்னேன். அ.சா.ஆ.1 புகாரில் பதிவெண் தெரியாத இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து அரைமணிநேரம் கழித்து நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நிஷாந்த் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. விபத்தில் எத்தனை வாகனம் சம்பந்தப்பட்டது என்றால் என் மகன் வாகனம் இல்லாமல் மேலும் இரண்டு வாகனங்கள் சம்பந்தப்பட்டது. ஸ்கூட்டி வாகனம் என் மகன் வாகனம் மீது மோதியதாக இன்று போலிசார் சொல்லிகொடுத்ததன் பேரில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை.

<u>மறுவிசாரணை-இல்லை</u>

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**C.C.No.72 of 2024**

அரசுதரப்பு **2 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் | வயது | : | 45 |
| தந்தை பெயர் | : | சுப்ரமணி | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | வண்டிபாளையம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 9894401333 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.04.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

முதல் விசாரணை**:**

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன்.இறந்த கோகுல் எனது தம்பி மகன். 06.09.2023 அன்று காலையில் கோகுலின் தாயார் அவரை கடைக்கு அனுப்பியுள்ளார். கோகுல் இருசக்கர வாகனத்தில் மார்க்கெட்டுக்கு சென்றுள்ளார். அப்போது பார்வதி ஆயில் மில் எதிரே செல்லும்போது வடக்கிலிருந்து தெற்காக செல்லும் போது குறுக்கில் வந்த ஸ்கூட்டி வாகனம் மோதியதாகவும், பின்னால் வந்த பல்சர் வாகனம் கோகுல் மீது மோதி விபத்து ஏற்பட்டத்தில் அவருக்கு தலையில் காயம் பட்டதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். அதன்பேரில் நான் ஜிப்மரில் சென்று பார்த்தேன். அவருக்கு பின் தலையில் அடிபட்டு இருந்தது. அன்று இரவு 09.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 எனது தம்பி. அ.சா.1 கூறிதான் விபத்து சம்பந்தமாக தெரியும். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஸ்கூட்டி குறுக்கில் வந்து மோதியதாக போலிஸ் விசாரணையில் கூறினேன். ஸ்கூட்டி வந்து மோதியதாக முதன்முதலாக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை</u>

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**C.C.No.72 of 2024**

அரசுதரப்பு **3 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விமல்ராஜ் | வயது | : | 36 |
| தந்தை பெயர் | : | வீரராகவன் | தொழில் | : | கேஸ் ஏஜென்சி |
| கிராமம் | : | ஆயிக்குப்பம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | குறிஞ்சிபாடி | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 8675772585 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.04.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**

முதல் விசாரணை**:**

நான் ஆயிக்குப்பத்தில் குடியிருக்கிறேன். அ.சா.1 எனது மாமா. 06.09.2023 அன்று எனது மாமா மகன் கோகுல் வீட்டிலிருந்து கடைக்கு இருசக்கர வாகனத்தில் செல்லும்போது வண்டிபாளைம் பார்வதி ஆயில் மில் அருகே ஸ்கூட்டி மோதி விபத்து ஏற்பட்டதாக என் மாமா தகவல் கூறி கடலுர் GHக்கு சென்று பார்த்தேன். அவருக்கு தலையில் அடிபட்டு இருந்தது. மேல் சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை பலனின்றி இரவு 11.00 மணிக்கு இறந்துவிட்டார். அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து பிரேத விசாரணை செய்தார்கள். அப்போது உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 எனது மாமா. அ.சா.1 கூறிதான் விபத்து சம்பந்தமாக தெரியும். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஸ்கூட்டி  வந்து மோதியதாக போலிஸ் விசாரணையில் கூறினேன். ஸ்கூட்டி வந்து மோதியதாக முதன்முதலாக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**CUDDALORE DISTRICT, CUDDALORE**

**<u>C.C.No.72 of 2024</u>**

அரசுதரப்பு **4 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | வயது | : | 51 |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | சென்ட்ரிங் வேலை |
| கிராமம் | : | வண்டிபாளையம் | ஜாதி | : | ------- |
| தாலுக்கா | : | கடலூர் | சமயம் | : | ------- |
| மாவட்டம் | : | கடலூர் | மொபைல் | : | 7094581920 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 21.04.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>**(**எதிரி முன்னிலை**,** வழக்கறிஞர் முன்னிலை**)**</u>

<u>முதல் விசாரணை**:**</u>

நான் வண்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். விபத்தில் இறந்த கோகுல் பக்கத்து தெருவை சேர்ந்தவர். 06.09.2023 அன்று காலை 10.30 மணியளவில் வண்டிபாளையம் Aristro பள்ளி அருகே நின்றுகொண்டிருந்தேன். அப்போது இறந்த கோகுல் கடலுரை நோக்கி வண்டியில் வந்துகொண்டிருந்தார். ஸ்கூட்டியில் வந்த இருவர் ஆயில் கடைக்கு செல்வதற்காக திரும்பினார்கள். இரண்டு வாகனமும் மோதி கொண்டது. அதில் கோகுல் கீழே விழுந்து காயம் பட்டது. அதனால் அ.சா.1 க்கு நானும், கன்னியப்பனும் தகவல் சொன்னோம். அ.சா.1, ஆட்டோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மறுநாள் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். இரண்டு வாகனங்களின் பதிவெண் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சத்தம் கேட்டு ஓடினேன். விபத்தில் மூன்று வாகனங்கள் சம்பந்தப்பட்டது. மூன்றாவது வண்டி சிவப்பு நிற

பல்சர். போலிஸ் விசாரித்தபோது சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும், ஸ்கூட்டி குறுக்கில் வந்ததாகவும் கூறினேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அ.சா.1 எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை</u>